## இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை – 2017

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2016 இன் 11 ஆம் இலக்க இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களைத் தவிர்த்து, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலுத்துகைகள் மேற்கொள்ளப்படாத ஆனால் செயற்திட்டத்திற்கு கொள்வனவுசெய்யப்பட்ட ரூபா 2,448,971 தொகையான 03 உபகரணம் மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களாக கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்காததுடன் செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்ட ஆனால் கொள்வனவு செய்யப்படாத ரூபா 2,521,362 தொகையான 05 உபகரணம் மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களாக கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 136,000 கூட்டுத்தொகையான 45 திருத்தஞ்செய்யப்பட்ட காசோலைகள் மீளாய்வாண்டில் தொடர்புடைய செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாடு பூர்த்தியடைந்தவுடன் பெறப்பட்ட முற்பணங்கள் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 07 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 581,000 கூட்டுத்தொகையான முற்பணங்களின் தீர்ப்பனவுக்கு 20 நாட்கள் தொடக்கம் 287 நாட்கள் வரையான காலப்பகுதியொன்று கடந்திருந்தது. அதேபோன்று, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் 06 ஆய்வு செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 125,578 தொகையான கட்டுநிதிகள் 2017 திசெம்பர் 31 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிசார் விளைவுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 571,740 மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,084,732 மிகையொன்றாக காணப்பட்டிருந்தமையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 512,992 இனால் நிதிசார் விளைவுகளில் முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 3,487,406 இனால் விநியோகம் மற்றும் நுகரத்தக்கப்பொருட்கள் அதிகரித்திருந்த போதிலும் மீண்டெழும் மானியம் ரூபா 4,302,111 இனால் அதிகரித்திருந்தமை மேற்குறித்த அதிகரிப்புக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

2013 ஆம் ஆண்டில் சபையின் நிதிசார் விளைவுகளில் பற்றாக்குறையொன்று காணப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையிலும் நிதிசார் விளைவுகளில் மிகையொன்று காணப்பட்டிருந்தது. இருப்பினும், ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற்கொண்ட பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 33,450,089 தொகையாகக் காணப்பட்ட பங்களிப்பு 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 56,780,182 வரை தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

ஆராய்ச்சி சபையினால் பிரதானமாக தனிநபர் ஆராய்ச்சி செயற்திட்டங்கள், இலக்கிடப்பட்ட பல்நோக்கு விடய ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மற்றும் தனியார் பொது கூட்டுமுயற்சி ஆராய்ச்சி செயற்திட்டங்கள் என்பன அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தில் ஒவ்வொரு ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் தனித்தனியாக காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடுகள் மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விஞ்ஞான மேற்கோள்காட்டல் குறிகாட்டியில் (Science Citation Index) (எஸ்சீஐ) பத்திரமொன்றில் வெளியிடுவதன் திறமை "புலன் விசாரணையின்மூலமான ஆராய்ச்சி" செயற்திட்டத்தின் இறுதி விளைவினை மதிப்பீடு அதன் வெற்றியினைத் தீர்மானிக்கின்ற அடிப்படையாக கருதப்படுகின்ற அதேவேளை, தேசிய ஆராய்ச்சி சபை அதிகாரச்சட்டத்தின் 03(ஆ) பிரிவின் பிரகாரம் தேசிய தேவைகளுக்கு பங்களிப்பதற்கான ஆராய்ச்சி அடிப்படையொன்றினை அபிவிருத்தி செய்வதனை வழிவகுத்துக் கொடுத்தல் ஆராய்ச்சி சபையின் நோக்கமொன்றாகக் காணப்படுகின்ற போதிலும், ஆராய்ச்சிகள், அதன் தாக்கம் மற்றும் செயன்முறை ரீதியான பயன்பாட்டு விளைவுகள் தொடர்பில் கவனஞ்செலுத்துவதன் மூலம் அது தொடர்பில் ஆராய்ச்சி சபை அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்தியிருக்கவில்லை அல்லது பரிந்துரையொன்றை வழங்கியிருக்கவில்லை.

(ஆ) ரூபா 171,915,712 மானியப் பெறுமதியுடைய ‘‘புலன்விசாரணை மூலமான ஆராய்ச்சி’’ 45 செயற்திட்டங்களின் இறுதி அறிக்கை மதிப்பீடுகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 88,386,921 மானியப் பெறுமதியொன்றையுடைய 21 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்தியாக்கப்பட்டிருந்தது என குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், தேசிய தேவைகளுக்கான அந்த ஆராய்ச்சிகளின் விளைவுகளினைப் பிரயோகிப்பதன் சாத்தியக்கூறு தொடர்பில் மதிப்பீடொன்றை நடாத்தி ஆராய்ச்சியினை முன்னேற்றுவதன் மூலம் நல்லதொரு அல்லது செயற்பாடொன்றின் முன்னேற்றம் தொடர்பில் தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், இந்த ஆராய்ச்சி செயற்திட்டங்களின் ரூபா 5,323,000 மானியப் பெறுமதியொன்றுடனான ஒரு ஆராய்ச்சி செயற்திட்டத்திற்கு மாத்திரம் காப்புரிமை பெறப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் டிசெம்பர் 31 வரை நடாத்திச் செல்லப்படும் ஆராய்ச்சி செயற்திட்டங்களில், 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 110,233,227 தொகையான ஏற்பாடொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த 32 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் நிதிசார் செயலாற்றல் 07 சதவீதம் மற்றும் 50 சதவீதத்திற்கிடையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கான வழிகாட்டலின் 21 ஆம் இலக்க பொது விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் பூர்த்தியிலிருந்து 03 மாதங்களுக்குள் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பூர்த்தியாக்கப்பட்ட ரூபா 29,419,455 மானியப் பெறுமதியொன்றுடனான 11 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ச்சி அறிக்கைகள் கணக்காய்வு திகதியான 2018 யூலை வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. அதன் தாமதக் காலப்பகுதி 03 மாதங்கள் தொடக்கம் 19 மாதங்களுக்கிடையில் காணப்பட்டது.

(உ) 2012 ஆகஸ்ட் 31 இல் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 2,635,000 மானியப் பெறுமதியொன்றையுடைய ஆராய்ச்சி செயற்திட்டமொன்றின் இறுதி அறிக்கையுடன் தொடர்புடைய மதிப்பீட்டு அறிக்கைகள் 2015 ஆகஸ்ட் 30 இல் பூர்த்தியாக்கப்பட்டதுடன் 2017 பெப்ரவரி 25 இல் கையளிக்கப்பட்டிருந்தது. மதிப்பிட்டு அறிக்கையின் பிரகாரம் ஆராய்ச்சி ‘‘திருப்திகரமானதாகக்’’ காணப்பட்டது என குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் பூர்த்தியின் பின்னர் 02 வருடங்களினை விட அதிகமான காலப்பகுதி கடந்திருந்த போதிலும், செயற்திட்ட முன்மொழிவில் குறிப்பிடப்பட்ட 05 எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களில் 03 நோக்கங்களினை அடைவதற்கு தவறப்பட்டிருந்தது.

(ஊ) நாற்று மேடைகளினை ஸ்தாபிப்பதற்கு மற்றும் வணிகமயப்படுத்தலுக்கு பொருத்தமான வல்லப்பட்டை பயிர்ச்செய்கையினை (resin of agarwood plants) முன்னேற்றுவதற்கு தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 11,583,792 கிரயமொன்றில் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்டம் 2017 திசெம்பரளவில் வெற்றிகரமாக பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்கு ரூபா 5,687,500 தொகையொன்றை ஆராய்ச்சி சபை செலவழித்திருந்தது. நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்களினை உருவாக்க, ஏற்றுமதியினூடாக வருமானமொன்றை உழைப்பதற்கு எதிர்பாக்கப்பட்ட போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 யூலை வரையிலும் வல்லப்பட்டை பயிர் பாகங்களின் ஏற்றுமதிக்கு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து தேவையான அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு தவறப்பட்டிருந்தது. ஆகையினால், செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களினை அடைவது சாத்தியமற்றதாகக் காணப்பட்டிருந்தது.

(எ) வவுனியா மாவட்டத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட கிராம சேவையாளர் பிரிவொன்றில் குடிநீர் மற்றும் வீட்டுக்குரிய நீரிலுள்ய ∴ப்ளோரைடு மட்டம் (Fluoride level) மற்றும் செறிவினை குறைப்பதனூடாக சிறுநீரக தொற்றினை இழிவளவாக்குவதற்கான தாக்கத்தினை இனங்காண்பதற்கு தனியார் கம்பனியொன்றுடன் 2014 ஆம் ரூபா 20,218,000 மதிப்பிடப்பட்ட பெறுமதியொன்றுக்கு ஆராய்ச்சி செயற்திட்டமொன்றை ஆராய்ச்சி சபை ஆரம்பித்திருந்தது. நீர் சுத்திகரிப்பு நிலைப்படுத்தலொன்றினூடாக முழு கிராம சேவையாளர் பிரிவுக்கும் தாழ்ந்த ∴ப்ளோரைடு மட்டம் மற்றும் செறிவுடன் நீரை விநியோகிப்பதனூடாக சிறுநீரக தொற்று நிலைமைகளினை தவிர்க்கும் மற்றும் இழிந்தளவாக்கும் திறமைவாய்ந்த விஞ்ஞானரீதியான பரீட்சிப்பினை உள்ளடக்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முழுச்செயற்திட்டத்திற்குமான ஆராய்ச்சி சபையின் பங்களிப்பாகக் காணப்பட்ட ரூபா 10,109,000 தொகையொன்றில் ரூபா 2,403,925 அல்லது 24 சதவீதம் ஏற்பட்டதன் மூலம் 2014 ஆகஸ்ட் மாதத்தில் நீர் தூய்மையாக்கியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் இந்த உபகரணத்தை அமைப்பதற்கான இடமொன்றை முறையாக இனங்கண்டிருக்கவில்லை. 2014 ஆகஸ்ட் மாதத்தில் தனியார் காணியொன்றில், உரிமையாளரின் அனுமதியுடன் காணியில் அது அமைக்கப்பட்ட போதிலும், காணி உரிமையாளர் அவரின் காணியினை கோரியிருந்தமை காரணமாக 2015 மே மாதத்தில் அந்த இடத்திலிருந்து அந்த தூய்மையாக்கி உபகரணம் அகற்றப்பட்டிருந்தது. அந்த விளைவாக, செயற்திட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சிக்கு மாற்று இடங்களிலிருந்து நீர் தூய்மையாக்கி எடுக்கப்பட்டிருந்தது.

(ii) ரூபா 300,000 இற்கு மதிப்பிடப்பட்ட இந்த உபகரணம் 2018 மார்ச் மாதத்தில் ரூபா 78,000 விற்பனை செய்யப்பட்டிருந்தது. சாத்திய வள ஆய்வொன்றினை நடாத்தியதன் பின்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையின் விளைவொன்றாக, உபகரணத்தின் கொள்வனவு சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்டதின் பிரதான நோக்கமொன்றாகக் காணப்பட்ட நீர் சுத்திகரிப்பு உபகரணமொன்றை நிறுவுவது நிறைவேற்ற முடியாதிருந்தது.

(iii) செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஆகஸ்ட் 11 இல் செயற்திட்டக் காலப்பகுதி முடிவடைந்திருந்ததுடன் செயற்திட்டம் தொடர்பிலான பகுப்பாய்வு அறிக்கையொன்று 03 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் ஆராய்ச்சி சபைக்கு கையளிக்க வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 யூலை வரையிலும் இறுதி செயற்திட்ட அறிக்கை சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி சபையினால் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கு ஏற்பாடுகளினை வழங்கும் போது ஆய்வுகளின் செயலாற்றலினை காலத்திற்கு காலம் பரீட்சிப்பதன் மூலம் ஏற்பாடுகளினை வழங்குவதற்குப் பதிலாக, ஆரம்பிப்பு நேரத்தில் ஒவ்வொரு செயற்திட்டத்தின் கீழ் ஆராய்ச்சிகள் தொடர்பிலான மொத்த ஏற்பாடு நடைமுறைக்கணக்கொன்றிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2013 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின் போது ஆரம்பிக்கப்பட்ட 155 செயற்திட்டங்கள் தொடர்பில் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 897,277,751 தொகையான மானியங்களில், மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைக் கணக்குகளில் ரூபா 522,205,060 தொகையொன்று விளைவற்றிருந்தது.

(ஆ) கணக்காய்வு திகதியான 2018 யூலை வரை சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 223,136,633 மானியப் பெறுமதியுடைய 2008 தொடக்கம் வரையான 2017 காலப்பகுதியின் போது பூர்த்தியடைந்து காணப்பட்ட 55 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் இறுதி அறிக்கைகளிலிருந்து 42 மாதங்கள் தொடக்கம் 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும், ஆராய்ச்சி செயற்திட்டங்களின் மதிப்பீடுகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான மதிப்பீடுகளில் தாமதங்கள் காரணமாக, ஆய்வுகளின் முக்கியமான நடைமுறை ரீதியான விளைவுகளினை இழிவுபடுத்த முடியுமாகவிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளின் அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் நிலைபேறான ‘‘நிகழ்ச்சிநிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டியிருந்ததுடன், மீளாய்வாண்டு தொடர்பில் அவர்களின் பரப்பெல்லை வரம்பின் கீழ் காணப்படும் செயற்பாடுகள் தொடர்பில் எவ்வாறு நடவடிக்கைகளினை எடுக்கவேண்டுமென இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை அறிந்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பரப்பெல்லையின் பிரகாரம் அடைந்துகொள்ள வேண்டிக் காணப்பட்ட நோக்கங்களாகக் காணப்பட்ட நிலைபேறான கமத்தொழிலின் மேம்படுத்துதல், ஆரோக்கியத்தின் மேம்படுத்தல் மற்றும் எல்லா வயதிலும் நல்வாழ்வு, நிலைபேறான கைத்தொழில்மயமாக்கலின் மேம்படுத்தல், நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தியின் உறுதிப்படுத்தல் மற்றும் கடல்சார் வளங்களின் நிலைபேறான பயன்பாடு போன்ற நோக்கங்கள் தேசிய ஆராய்ச்சி சபையினால் இனங்காணப்பட்டிருந்தது.

கண்டுபிடிப்புக்களினை ஊக்கப்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் பொது மற்றும் தனியார் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான செலவினத்தை அதிகரித்தல் போன்றவை பிரதான இலக்குகள் என இனங்காண முடியுமாக இருந்த போதிலும் இந்த நோக்கங்களில் நிலைபேறான கைத்தொழில்மயமாக்கலொன்றினை மேம்படுத்தும் நோக்கம் ஆராய்ச்சி சபையின் பரப்புடன் நேரடியாகத் தொடர்புபடுகின்றதிலிருந்த ஒரு மில்லியன் சனத்தொகைக்கு கிடைக்கக்கூடிய ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கை, பொது - தனியார் கூட்டு ஆராய்ச்சி செயற்திட்டத்தின் சதவீதம், வருடாந்தம் உருவாகும் கண்டுபிடிப்புக்களின் எண்ணிக்கை மற்றும் வணிகமயமாக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை, பெறப்பட்ட காப்புரிமைகளின் எண்ணிக்கை, நடாத்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச வெளிப்பீடுகளின் எண்ணிக்கை மற்றும் இந்த இலக்குகளின் அடிப்படையில் அடைவுகளின் அளவிடைகளுக்கான குறிகாட்டிகளாக ஆய்வுகளினூடாக பிரயோகிக்கப்பட்ட பரிகாரங்களாக அங்கு தேசிய ரீதியாக காணப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை போன்றவை இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆராய்ச்சி சபை அதன் பரப்பெல்லையுடன் சம்பந்தப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளினை இனங்கண்டிருந்த போதிலும், அதனுடன் தொடர்புடைய குறிகாட்டிகள் தெளிவாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. ‘‘நிலைபேறான கைத்தொழில்மயமாக்கலினை மேம்படுத்தல்’’ நோக்கம் தொடர்பில் இனங்காணப்பட்ட குறிகாட்டி ஒவ்வொரு துறையினால் வழங்கப்பட்ட மானியங்கள் அல்லது சதவீதத்தின் பெறுமதியாகக் காணப்பட்டது. தேசிய தேவைகள் தொடர்பில் அரச மானியங்களின் அதிஉத்தம பயன்பாட்டினை உறுதிப்படுத்தும் அதேவேளை, இலக்குகளினை அடைந்துகொள்ளும் செயலாற்றலினை அளவிடுதவதற்கான இறுதி குறிக்காட்டியாக அது துல்லியமானதாக காணப்பட்ட போதிலும், துறைகளில்

இனங்காணப்பட்ட தற்போதுள்ள பிரச்சினைகளினை இனங்காண்பதற்கு, பிரதானமாக தீர்வுகள் தேவைப்படுகின்ற பிரச்சினைகள் எதுவென துல்லியமாக கண்டறிய மற்றும் சுகாதார அமைச்சு, கமத்தொழில் அமைச்சு மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் போன்ற அமைப்புக்களுடன் இணைந்து அதற்கான ஒவ்வொரு துறைகள் தொடர்பில் முக்கிய குறிபாட்டிகளினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேலே குறிப்பிடப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு மேலதிகமாக, தேசிய தேவைகளுக்கு பங்களிப்புச்செய்யும் ஆராய்ச்சி தளமொன்றை அபிவிருத்தி செய்வது ஆராய்ச்சி சபையின் பிரதான நோக்கமொன்றாகக் காணப்பட்டதிலிருந்து, ''அனைவருக்கும் நீர் மற்றும் கழிவகற்றல் வசதிகளினைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவற்றின் நிலைபேறான முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்தலுக்கான'' மறைமுகமான பங்களிப்பின் இயலுமை இனங்காணப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், அதனுடன் தொடர்புடைய இலக்குகள், இலக்குகளினை அடையக்கூடியதாகக் காணப்படும் மைல்கல்கள் அடிப்படை தரவுகள் அத்துடன் செயலாற்றலினை அளவிடுதவற்காக காணப்படும் குறிகாட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஏதேனும் செயற்பாட்டின் சரியான செயலாற்றிலினை (குறிகாட்டிகளின் அடிப்படையில்) அளவிடுவதற்கு துல்லியமான தரவுத்தளமொன்றை வைத்திருப்பது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது எனினும், நிதிசார் ஏற்பாடுகளினை மேற்கொள்ளல், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகளினை அளவிடுதவற்கான துல்லியமான தரவுத்தளமொன்றை உருவாக்க போதுமான பௌதீக வசதிகளினை பூர்த்திசெய்தல் மற்றும் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியரொருவரினை தீர்மானித்தல் போன்ற உண்மைகள் தொடர்பில் சபை கவனஞ்செலுத்தியிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------------

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை

--------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி செயற்திட்டங்களின் வினைத்திறமை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியின் போது பூர்த்தியினை உறுதிப்படுத்துவதற்கான உபகரணங்களின் கொள்வனவினை மேற்கொள்வதற்கு திட்டமொன்று தயாரிக்கப்பட்டதிலிருந்து, பெறுகை வகை, பெறுகை முறைமை, விலைமனு ஆவணங்களின் தயாரிப்பு மற்றும் அங்கீகாரத்திற்கு தேவையான காலம், விலைமனுக்களினை அழைப்பதற்கு தேவையான காலம், தொழில்நுட்பக்குழுவின் மதிப்பீடுகள், ஆராய்ச்சி செயற்திட்ட முன்மொழிவுகளினைப் பெற்றுக்கொள்ளும் போது பெறுகைக் குழுவின் அங்கீகாரத்திற்கு தேவையான காலப்பகுதி போன்ற பெறுகை நடைமுறையொன்றின் அடிப்படை மூலக்கூறுகளினை உள்ளடக்கி ஆய்வாளரிடமிருந்த பெறுகைத் திட்டமொன்று / கால சட்டகமொன்று பெறவேண்டியிருந்த போதிலும், அந்த வகையில் செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது அந்தக் கொள்வனவுகளுக்குச் செய்யப்பட்டிருந்த மானியங்களின் வழங்குகைகளிலிருந்து 52 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 73,461,671 தொகையான உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், பெறுகை முறையாக திட்டமிடப்பட்டிருந்தால், தாமதமின்றி கொள்வனவு செய்வதற்கு சாத்தியக்கூறொன்று காணப்பட்டிருக்கும் என அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) ஆராய்ச்சி செயற்திட்டங்களின் முகாமைத்துவம் | (i) உரிய நேரத்தில் செயலாற்றல் அறிக்கைகளினைப் பெற்றுக்கொள்ளாமை மற்றும் மதிப்பீடுகளினை மேற்கொள்வதற்கு நீண்டகாலமொன்று எடுத்தமை. |
| | (ii) செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பில் மதிப்பீட்டினர்களின் கருத்துக்களினை ஆய்வாளர்கள் அறிந்திருக்க வேண்டிய போதிலும், அது தொடர்பில் உடனடியாக பதில்களினைப் பெற்றுக்கொள்வதற்கு முறைமையொன்று காணப்பட்டமை. |
| | (iii) ஆய்வாளரினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆய்வு நிறுவகம் செயற்திட்டத்தின் மதிப்பீட்டில் ஈடுபடலாகாது. |
| | (iv) “இயக்க ஆராய்ச்சி செயற்திட்ட புலனாய்வின்” செயலாற்றலினை மதிப்பிடும் போது, ஆய்வாளர்களினால் வழங்கப்பட்ட செயலாற்றல் அறிக்கைகள் மாத்திரம் மதிப்பிடப்பட்டதுடன் பௌதிகரீதியாக பரீட்சிப்பதன் மூலம் செயலாற்றல் மீளாய்வு செய்யப்படவில்லை. |
| | (v) நிதிகள் வழங்கப்பட்ட உடனடியாக ஆராய்ச்சிகளின் ஆரம்பிப்பிற்காக பயன்படுத்தப்பட்டமையை உறுதிப்படுத்தும் முறைமையொன்று காணப்படாமை. |
| | (vi) ஆராய்ச்சி அல்லது ஆய்வாளர் தொடர்பில் மதிப்பீடாளர்களுக்கு எவ்வித தனிப்பட்ட ஆர்வமும் காணப்படாமையினால் கூற்றொன்றினைப் பெற்றுக்கொள்ளாமை. |
| (ஆ) பெறுகைகள் முகாமைத்துவம் | (i) இரகசியத்தன்மை, பாராபட்சமற்றதன்மை மற்றும் தனிப்பட்ட விருப்பமின்மைகள் தொடர்பில் பெறுகைகள் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களினால் கூற்றொன்று வெளிபடுத்தப்படாமை. |
| | (ii) விலைமனு திறக்கையில் விலைமனுதாரர்களின் வருகைக்கு பதிவேடொன்று பேணப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | நிலையான சொத்துக்களின் கொள்வனவு தொடர்பில் பொருள் பெறுகைக் குறிப்பு வழங்கப்படாமை. |
| | | (ii) | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களினை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவதில் தாமதங்கள் காணப்படுகின்றமை மற்றும் புத்தகங்களுக்குள் சில சொத்துக்களினைப் பதிவதற்கு தவிர்த்தல், வேண்டப்படும் அனைத்து தகவல்களினையும் உள்ளடக்காமை. |
| | | (iii) | பேரேட்டு கணக்குகளிலுள்ள பதிவுகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு இணக்கஞ்செய்யப்படாமை மற்றும் கண்கானிப்பு உத்தியோகத்தரொருவர் மூலம் மேற்பார்வை செய்யப்படாமை. |
| (ஈ) | சிறுசெலவுக் காசு மற்றும் செலவுக் கட்டுப்பாடு | | அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரினால் சிறுசெலவு காசு செலவினத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பதிவேடுகள் காணப்படாமை. |